# தேனி கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 311 கோரிக்கை மனுக்கள் ஏற்பு

தேனி, ஏப்.29– தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 311 கோரிக்கை மனுக்களை மாவட்ட கலெக்டர் திரு.ரஞ்ஜீத் சிங், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 311 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட கலெக்டர், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.1,01,800/ மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 15 நபர்களுக்கும், ரூ.10,395/ மதிப்பிலான உருப்பெருக்கி 1 நபருக்கும், தலா ரூ.13,600/ மதிப்பிலான டெய்சி பிளேயர் 2 நபர்களுக்கும், தலா ரூ.1,756/ மதிப்பிலான கைக்கடிகாரம் 4 நபர்களுக்கும் என மொத்தம் 22 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15,71,619/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மாற்றுத்திறனாளிகள் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் தலா 8 கிராம் மதிப்பிலான தங்க நாணயத்தை 6 மாற்றுத்திறனாளிகளுக்கும் மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

பின்னர், படைவீரர் கொடிநாள் 2022ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் பணிபுரிந்தபோது ரூ.9,60,000/ வசூல் செய்து இலக்கினை பூர்த்தி செய்த, தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் ஏகராஜ் அவர்களுக்கு மேதகு ஆளுநரின் பாராட்டுச் சான்று மற்றும் 30 கிராம் வெள்ளிப்பதக்கத்தினை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் முத்துமாதவன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சாந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை துணை ஆட்சியர் முத்துலெட்சுமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி மற்றும் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சொறிப்பாறைப்பட்டி சங்கரன்பாறையில் முத்துமாரியம்மன், முருகன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நாளை ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது. இதற்காக வாடிவாசல் அமைக்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில் நேற்று ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான முன்னேற்பாடுகள் குறித்தும், முறையாக வாடிவாசல், தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளதா என தாசில்தார் பாண்டியராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட பலர் ஆய்வின் போது உடனிருந்தனர்.

# காஷ்மீர் தீவிரவாதிகளை ஆதரித்து பேசிய பேச்சாளர் சுந்தரவல்லி மீது வத்தலகுண்டு போலீசில் புகார்

வத்தலகுண்டு, ஏப்.29– திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காவல் நிலையத்தில் பாரதிய ஜனதா கட்சி மகளிர் அணியினர் காஷ்மீரில் தீவிரவாதிகளை ஆதரித்து பேசிய திராவிட கழகத்தைச் சேர்ந்த பேச்சாளர் சுந்தரவல்லி மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கக்கோரி வத்தலகுண்டு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது மனுவை வத்தலகுண்டு ஒன்றிய மகளிர் அணி தலைவர் அமுதா ரவி தலைமையில் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் வத்தலக்குண்டு ஒன்றிய தலைவர் கருணாநிதி உமா கனிமொழி லட்சுமி மற்றும் மகளிர் அணியினர் சார்பணியினர் கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர் மனுவை காவல் துறையினரிடம் வழங்கி இந்திய ராணுவத்தை களங்கப்படுத்தியது மட்டுமின்றி மத்திய அரசை குறை கூறி இந்திய ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் கலவரத்தை தூண்டும் வகையிலும் செயல்பட்ட சுந்தரவல்லி என்பவரை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்


**மாண்புமிகு சார் ஆட்சியர்**
**சார் ஆட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப.எண்.152/2025-அ2,**
**நாள்: 03.04.2025**

**பெறுநர்,**
**திரு.M.பைசல் ஹனீபா,**
**த/பெ.முகம்மது கனி, 14வது குறுக்கு**
**தெரு, ஜாமியா நகர், மேலக்காவேரி,**
**கும்பகோணம் தாலுக்கா,**
**தஞ்சாவூர் மாவட்டம்-612002**

...மனுதாரர்

**எதிராக**

**மாண்புமிகு சார் ஆட்சியர் அவர்கள்,**
**சார் ஆட்சியர் அலுவலகம்,**
**கும்பகோணம்.** ...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் **திரு.M.பைசல் ஹனீபா** என்பவரின் தாயார் **மு.ஜனூன் ஜாரியா** என்பவர் கடந்த **12.02.2022** அன்று மேற்படி வட்டம், **க.எண்.16,** முதலித் தெருவில் இறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்கக் கோரி செய்ய மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த **விளம்பரம் கண்ட 30 நாட்களுக்குள்** சார் ஆட்சியர் அலுவலகம், கும்பகோணத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

**சார் ஆட்சியர்,**
**கும்பகோணம்**



**முத்தழகு பைனான்ஸ்**
**தங்கநகை ஏலஅறிவிப்பு**

எங்கள் நிறுவனத்தில் **30.04.2024** தேதிக்கு முன்னதாக நகைக்கடன் பெற்று, காலவரையரை முடிந்தும் திருப்பப்படாத மற்றும் வட்டி செலுத்தி நகை கடனை புதுப்பிக்காத வாடிக்கையாளர்களின் நகைக்கடன்களுக்கு கடிதம் மூலமும், பதிவுதபால் மூலமும், மற்றும் பல்வேறுவகைகளில் நினைவுப்படுத்தியும் ஈடுவைக்கப்பட்ட நகைகளை மீட்கவோ அல்லது புதுப்பிக்கவோ இல்லை. எனவே **29.05.2025 வியாழக்கிழமை காலை 09.00** மணிக்குள் அசல் மற்றும் வட்டியை செலுத்தி நகைகடனை திருப்பிக்கொள்ளவும். தவறும் பட்சத்தில் திருப்பபடாத கீழ்கண்ட நகைகடன்கள் அனைத்தும் நிறுவனத்தின் விதிப்படி **29.05.2025 வியாழக்கிழமை காலை 11.00** மணிக்குள் பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை தெரிவிக்கிறோம். ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் ரூபாய் 10000/ம் (பத்துஆயிரம்) அட்வான்ஸ் தொகைக்கட்டி pancard ஆதார்கார்டு நகலுடன ஏலத்தில் கலந்துகொள்ளவும் ஏலத்தை மாற்றிவைக்கவோ நிறுத்திவைக்கவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு முழு உரிமைஉண்டு.

விளம்பர நாளிதழ்நகலை நிறுவனத்தின் அறிவிப்புபலகையில் ஒட்டபட்டுள்ளது.

**முத்தழகு பைனான்ஸ்** **இப்படிக்கு**
எண் 10/7/3 **அதிகாரம் பெற்ற அதிகாரி**
ரூபா காம்ப்ளக்ஸ் முதல் தளம்,
பேருந்து நிலையம் எதிரில், சுரண்டை-627859.

**சுரண்டை.**

JL-3337,JL-3366,JL-3367,JL-3400.



**இந்தோ பிரெஞ்ச் லேபரேட்டரீஸ் லிமிடெட்**
CIN: U24231TN1962PLC004884
பதிவு அலுவலக முகவரி: எண்.12, 66வது தெரு, 11வது செக்டர்,
கே.கே. நகர், சென்னை 600 078, தமிழ்நாடு, இந்தியா.
Email: indofrench.laboratories@gmail.com Website: www.indofrenchlabs.com

**அசாதாரண பொதுக் கூட்டம் ஒத்திவைப்பு குறித்த அறிவிப்பு**

நிறுவனத்தின் உறுப்பினர்களின் அசாதாரண பொதுக் கூட்டம் ('EGM') வெள்ளிக்கிழமை, 25 ஏப்ரல் 2025 அன்று காலை 11.00 மணிக்கு, பதிவு அலுவலகம் : எண்.12, 66வது தெரு, 11வது செக்டார், கே.கே. நகர், சென்னை 600 078, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் நடைபெற இருந்தது, நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 103ன் விதிகளின்படி, குறைந்தபட்ச உறுப்பினர்கள் பங்கேற்காத நிலையில், கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த ஒத்திவைக்கப்பட்ட அசாதாரண பொதுக்கூட்டம், மார்ச் 12, 2025 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதே வணிகங்களை பரிவர்த்தனை செய்ய அடுத்த வாரம், அதே இடத்தில் **வெள்ளிக்கிழமை, 02 மே 2025, காலை 11.00 மணிக்கு** நடைபெறும். அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் **www.indofrenchlabs.com**ல் கிடைக்கின்றன, மேலும் இந்த EGM தேதி வரையிலான அனைத்து வேலை நாட்களிலும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் மேற்கூறிய ஆவணங்களின் நகல்களைப் பார்வையிடலாம்.

நிறுவனத்துடனான தொடர்புத் தகவலைப் புதுப்பிக்க விரும்பும் பங்குதாரர்கள், தங்கள் விவரங்களை **indofrench.laboratories@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நிறுவனத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின் பேரில்
**இந்தோ பிரெஞ்ச் லேபரேட்டரீஸ் லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/-
இடம்: சென்னை **இயாந்தி பெர்னாண்டஸ்**
தேதி: 26 ஏப்ரல் 2025 முழுநேர இயக்குநர்
DIN: 07465423


# மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா: கொடியேற்றத்துடன் துவக்கம்

மதுரை, ஏப்.29 உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா இன்று காலை தங்கம் மூலம் பூசப்பட்ட கொடிக்கம்பத்தில் வேதமந்திரங்கள், மேளதாளங்கள் முழங்க கொடியேற்றத்துடன் துவங்கியது. மீனாட்சி அம்மன் மற்றும் சுந்தரேஸ்வரர் பிரியாவிடை சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாக்கள் உலகப் புகழ் பெற்றதாகும். சைவத்தையும், வைணவத்தையும் இணைக்கும் விழாக்களாக சித்திரைத் திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது. அதன்படி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இன்று (29ந் தேதி) காலை 9.55 மணி முதல் 10.59 மணிக்குள் கொடியேற்றத்துடன் துவங்கியது. கோவிலில் உள்ள சுவாமி சன்னதி எதிரே உள்ள கம்பத்தடி மண்டபத்தை சுற்றி வண்ண வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. கொடியேற்றும் நிகழ்ச்சியையொட்டி முருகன், விநாயகர், சண்டிகேஸ்வரர், பஞ்ச மூர்த்திகளுடன் மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் பிரியாவிடையும் கந்த கம்பத்தடி மண்டபத்திற்கு எழுந்தருளினார்கள். அதனைத் தொடர்ந்து ஸ்தானீகா பட்டர் தலைமையில் 10 க்கு மேற்பட்ட பட்டர்கள் வெள்ளிகும்பத்தில் புனிதநீர் அடங்கிய கலசங்கள் வைத்து விசேஷ பூஜைகள் நடத்தினார்கள். முதலில் விக்னேஸ்வர பூஜை, புண்ணியகாம வாசனம், பஞ்சகாவியம், ரிஷபா யாகம், மற்றும் கொடிமர பூஜைகள் நடைபெற்றன. கொடிமரத்தில் வேதமந்திரங்கள் மேளதாளங்கள் முழங்க ரிஷப கொடி ஏற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து கொடி மரத்தை சுற்றிலும் குங்குமம், சந்தனம் பூசினார்கள். கொடி மரத்திற்கு பூக்கள், மாலைகள் சூட்டப்பட்டது. தர்ப்பைப் புல் போன்றவைகளை சுற்றிக் கட்டினார்கள். அதனை தொடர்ந்து மலர் பூஜை நடைபெற்றது. கொடிமர உயரத்திலிருந்து வண்ணவண்ண பூக்களை கொடிமரத்தில் தூவி பூஜை நடத்தினார்கள். இதனையடுத்து தீபாராதனையும் காட்டப்பட்டது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் சித்திரைத் திருவிழா இன்று தொடங்கி மே10 தேதி வரை 12 நாட்கள் நடைபெறுகிறது. இன்று கொடியேற்றம் நடைபெற்ற நிலையில் இனி தினமும் காலை, மாலை என இருவேளை சுவாமி புறப்பாடு மாசி வீதிகளில் நடைபெறும்.

விழாவின் முக்கிய விழாக்களான மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் மே 6 ந் தேதி நடைபெறும். மே 7ம் தேதி மீனாட்சி சுந்தரேசுவரர் திக்குவிஜயம் நடைபெறும். சிகர நிகழ்ச்சியான மே 8 ம் தேதி மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் காலை 8.35 மணிமுதல் 8.59. மணிக்குள் நடைபெறும். 6 ஆயிரம் பக்தர்களுக்கு இலவச தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர். அதேபோல், ரூ.500 கட்டணச்சீட்டு 2500 பேர், ரூ.200 கட்டணச் சீட்டு 3500 பேர், அரசு ஊழியர்கள் 1000 பேர் அனுமதிக்கப்படவுள்ளனர். மற்றும் பொதுமக்கள் திருக்கல்யாணத்தை காணும் வகையில் 20 இடங்களில் எல்இடி திரை மூலம் ஒளிபரப்பப்படவுள்ளன. மே 9ம் தேதி தேரோட்டமும் நடைபெற இருக்கிறது. மே10 ம் தேதியுடன் சித்திரைத் திருவிழா நிறைவு பெறும்.


**MDAHSG 108 ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிட்.,**
13/1, N.G.G.O.Colony, SRIVILLIPUTTUR-626125 Virudhunagar District.

**பேரவை கூட்ட அறிவிப்பு**

அன்புடையீர்,
நமது சங்கத்தின் பேரவைக் கூட்டம் எதிர்வரும் 17.05.2025ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அடியிற்கண்ட பொருள்கள் குறித்து கலந்து ஆலோசித்து முடிவு செய்ய நமது சங்க அலுவலக கட்டிடத்தில் வைத்து நடைபெற இருப்பதால் "அ" வகுப்பு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

**பேரவை கூட்ட பொருள்கள்**

1. 2021–22, 2022–23, 2023–24ம் ஆண்டுகளுக்கான இறுதி தணிக்கை அறிக்கையினை வாசித்து அங்கீகரித்தல்.
2. 01.04.2024 முதல் 31.03.2025 முடிய உள்ள வரவு செலவு இனங்களை வாசித்து அங்கீகாரம் செய்தல்.
3. 2024–25, 2025–26ம் ஆண்டிற்கு உத்தேச பட்ஜெட் அங்கீகாரம் செய்வது தொடர்பாக.
4. சங்க துணைவிதி எண்.45(20)ல் துணைவிதி திருத்தம் ஏற்படுத்தி உறுப்பினர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு மருந்தகம் தொடங்கி மருந்துகள் விற்பனை செய்வது தொடர்பாக
5. சங்கத்தில் நாளது வரை சேர்க்கப்பட்டுள்ள "அ" வகுப்பு அங்கத்தினர்களை ஏற்று அங்கீகாரம் செய்தல் தொடர்பாக.
6. சங்கத்தின் பெயரில் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள காலியிடங்களை சங்க வளர்ச்சிக்காக மற்றும் வருமானம் ஈட்ட மாத வாடகைக்கு விடும் விசயமாக.
7. சங்கத்தின் மீதும், துறை அலுவலர்கள் மீதும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ள வழக்குகளுக்கும் மற்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளுக்கும் வழக்கறிஞர் கட்டணம் வழங்கியது பின்னேற்பு அனுமதி அளிப்பது தொடர்பாக.
8. சங்கத்தின் செயலாளர் V.கோபிநாத் அவர்களுக்கு பதவி உயர்வு அளித்துள்ளதையும், செயலாளர் பதவிக்குரிய சம்பளம் நிர்ணயம் செய்துள்ளதை அங்கீகரித்தும், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் நிர்வாக அனுமதிக்கு அனுப்பும் விசயமாக.
9. சங்கத்தின் கணக்குகளை மென்பொருள் மூலம் நிர்வாகம் செய்ய புதிய கமப்யூட்டர் கொள்முதல் செய்துள்ளதையும், புதிய நகை எடை மிஷின் கொள்முதல் செய்துள்ளதையும் ஏற்று அங்கீகாரம் செய்தல்.
10. 2023–24 தணிக்கை அறிக்கைப்படி தளவாடங்கள் ஏலம் விட்டதில் ஏற்பட்ட நட்டம் ரூ.233.95 ஐ நிர்வாக அனுமதி பெற்று நட்டக் கணக்கில் வரவு செலவு செய்வது தொடர்பாக.
11. நமது சங்கத்துடன் Sp Spl 122 திருவில்லிபுத்தூர் NGGO கூட்டுறவு கட்டிட சங்கத்தினை இணைப்பது தொடர்பாக.
12. சங்க செயலாட்சியர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர விசயங்கள்.

குறிப்பு: (துணைவிதி திருத்தம் தொடர்பான விபரங்கள் சங்க அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது)

**திரு.V.முருகன்**
**செயலாட்சியர்**



**Form No. INC-26**

[Pursuant to rule 30 of the Companies (Incorporation) Rules, 2014]

Advertisement to be published in the newspaper for change of registered office of the Company from one State to another

**Before The Central Government, Regional Director, Southern Region Ministry of Corporate Affairs**

In the matter of sub-section (4) of Section 13 of the Companies Act, 2013 and clause (a) of sub-rule (5) of rule 30 of the Companies (Incorporation) Rules, 2014

and

In the matter of **Softcrylic Technology Solutions India Private Limited** having its registered office at 40/1, 41/1, 39/1, 42/1 and 43/1, 5th Floor, Kochar Globe, South Phase, Ambedkar Nagar, SIDCO Industrial Estate, Guindy Industrial Estate, Chennai, Chennai City Corporation, Tamil Nadu, India, 600032 bearing **Corporate Identification Number: U72200TN2002PTC049611** (the "Company")

.....Petitioner

Notice is hereby given to the General Public that the Company proposes to make application to the **Central Government/ Regional Director, Southern Region**, under Section 13 of the Companies Act, 2013 seeking confirmation of alteration of Memorandum of Association of the Company in terms of special resolution passed at the Annual General Meeting held on Friday, 18th April, 2025 to enable the Company to change its Registered Office from **"State of Tamil Nadu" under the jurisdiction of Registrar of Companies, Chennai to "State of Maharashtra" under the jurisdiction of Registrar of Companies, Mumbai.**

Any person whose interest is likely to be affected by the proposed change of the registered office of the Company may deliver **either on the MCA-21 portal (www.mca.gov.in)** by filing investor complaint form or cause to be delivered or send by registered post, his/her objections supported by an affidavit stating the nature of his/her interest and grounds of opposition to the ***Regional Director, Southern Region, 5th Floor, Shastri Bhawan, 26 Haddows Road, Chennai-600006, Tamil Nadu,*** within fourteen days from the date of publication of this notice with a copy to the applicant Company at its registered office address as mentioned below along with nature of interest and grounds of opposition.

**Registered Office:** 40/1, 41/1, 39/1, 42/1 and 43/1, 5th Floor, Kochar Globe, South Phase, Ambedkar Nagar, SIDCO Industrial Estate, Guindy Industrial Estate, Chennai, Chennai City Corporation, Tamil Nadu, India, 600032

**For and on behalf of Board of Directors,**
**Softcrylic Technology Solutions India Private Limited**
**Sd/-**

**Vikash Kumar Jain**
**Director**
**DIN:** 07823957
**Address:** Raheja Acropolis Phase I, Avalon 1303, Deonar, Mumbai, Maharashtra- 400088

**Date** : 29th April, 2025
**Place** : Mumbai



**முத்தழகு பைனான்ஸ்**
**தங்கநகை ஏலஅறிவிப்பு**

எங்கள் நிறுவனத்தில் **30.04.2024** தேதிக்கு முன்னதாக நகைக்கடன் பெற்று, காலவரையரை முடிந்தும் திருப்பப்படாத மற்றும் வட்டி செலுத்தி நகை கடனை புதுப்பிக்காத வாடிக்கையாளர்களின் நகைக்கடன்களுக்கு கடிதம் மூலமும், பதிவுதபால் மூலமும், மற்றும் பல்வேறுவகைகளில் நினைவுப்படுத்தியும் ஈடுவைக்கப்பட்ட நகைகளை மீட்கவோ அல்லது புதுப்பிக்கவோ இல்லை. எனவே **29.05.2025 வியாழக்கிழமை காலை 09.00** மணிக்குள் அசல் மற்றும் வட்டியை செலுத்தி நகைகடனை திருப்பிக்கொள்ளவும். தவறும் பட்சத்தில் திருப்பபடாத கீழ்கண்ட நகைகடன்கள் அனைத்தும் நிறுவனத்தின் விதிப்படி **29.05.2025 வியாழக்கிழமை நண்பகல் 12.00** மணிக்குள் பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை தெரிவிக்கிறோம். ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் ரூபாய் 10000/ம் (பத்துஆயிரம்) அட்வான்ஸ் தொகைக்கட்டி pancard ஆதார்கார்டு நகலுடன ஏலத்தில் கலந்துகொள்ளவும் ஏலத்தை மாற்றிவைக்கவோ நிறுத்திவைக்கவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு முழு உரிமைஉண்டு.

விளம்பர நாளிதழ்நகலை நிறுவனத்தின் அறிவிப்புபலகையில் ஒட்டபட்டுள்ளது.

**முத்தழகு பைனான்ஸ்** **இப்படிக்கு**
எண் 130, **அதிகாரம் பெற்ற அதிகாரி**
தரை தளம், தெற்கு ரத வீதி,
போஸ்ட் ஆபீஸ் எதிரில்,
செங்கோட்டை-627809.

**செங்கோட்டை.**

JL 11850,JL 11895,JL 11906.



**ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: ராஜபாளையம் மில்ஸ் பிரமிசஸ்
பி.ஏ.சி. ராமசாமி ராஜா சாலை, தபால் பெட்டி எண். 1,
ராஜபாளையம் 626 117, தமிழ்நாடு.
CIN : L17111TN1936PLC002298 Telephone: 04563 – 235666, Fax: 04563 - 236520
Email: rajacot@ramcotex.com Website: http://www.rajapalayammills.co.in

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**கோரப்படாத டிவிடெண்ட் உடைய பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்றம் செய்தல்**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124(6)ன்படி, தொடர்ந்து 7 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக செலுத்தப்படாத அல்லது கோரப்படாத டிவிடெண்ட் உடைய பங்குகள் ஐஇபிஎப்–க்கு கம்பெனியினால் மாற்றம் செய்யப்படும். அந்த மாற்றத்துக்கு தேவையான நடைமுறை விவரங்களை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016(விதிகள்)ல் இந்திய அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாத சமபங்குகளை ஐஇபிஎப்–க்கு மாற்ற கம்பெனி திட்டமிட்டுள்ளது.

தொடர்ந்து கடைசி ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோராத பங்குதாரர்களுக்கு பதிவுத்தபால் மூலம் தனித்தனியே அறிவிப்புகளை கம்பெனி அனுப்பி உள்ளது. அவர்களது டிவிடெண்டை விரைவாக கோரி பெறுமாறு அறிவுறுத்தி உள்ளது.

விதிகளின் விதி 6(3)ன்படி, தகவலுக்காகவும் மற்றும் பங்குதாரர்கள் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவும் பங்குதாரர்கள் மற்றும் மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்த விவரங்கள் கம்பெனியின் இணையதளம் www.rajapalayammills.co.in–ல் உள்ளது.

ஒருவேளை, 20 ஜூலை, 2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ டிவிடெண்டிற்கு செல்லத்தக்க கோரிக்கை எதுவும் பெறப்படாத பட்சத்தில், விதிகளின்படி கோரப்படாத டிவிடெண்டை உடைய சமபங்குகள் 8 செப்டம்பர், 2025 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்படும்.

ஐஇபிஎப்–பிற்கு பங்குகள் மற்றும் பங்குதாரர்களால் கோரப்படாத டிவிடெண்டுகள் மாற்றப்பட்டால், ஐஇபிஎப் ஆணையத்திற்கு ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஐஇபிஎப்–லிருந்து பங்குகளை பங்குதாரர்கள் கோரி பெறலாம். இதற்கான நடைமுறை மற்றும் படிவம் ஆகியவை www.rajapalayammills.co.in மற்றும் www.iepf.gov.in–ல் உள்ளது.

ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: ராஜபாளையம் கி. மகேஷ்வரன்
தேதி : 28.04.2025 செயலாளர்



**OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்**
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என்.சி. கேல்கர் மார்க்,
ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை 400028
Email: s.banerjee@omkaraarc.com Tel.: 022-26544000
(இந்தியா ரிசர்ஜென்ஸ் ஏஆர்சி டிரஸ்ட் VI)ன் அறங்காவலராகச் செயல்படுகிறது)

**(பிற்சேர்க்கை IV A (விதி 8(6) மற்றும் 9(1)ஐ பார்க்கவும்)**
**அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

2002ம் **ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பிரிவு 13(2)ன் கீழ் ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்து தொடர்பாக 02.01.2016 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பைப் வெளியிட்டு, அதன் மூலம் கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/உத்தரவாததாரர்கள்/நிறுவன உத்தரவாததாரர்களான (1) M/S. **பொன்காசி உதயம் எஜுகேஷனல் அன்ட் சாரிடபிள் டிரஸ்ட் (கடன்தாரர்/அடமானதாரர்), எண்.357 B-6, ஓலிவாஸ் வளாகம், 2வது தளம், கே.பி. சாலை, நாகர்கோவில், மேலும் M/S. பொன்காசி உதயம் எஜுகேஷனல் அன்ட் சாரிடபிள் டிரஸ்ட், தமிழன் நகர், சென்பகராமன்புதூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் 629304, (2) திரு. திருக்கடல் உதயம் (உடன் கடன்தாரர்/அடமானதாரர்), த/பெ. பொன்காசி உதயம், தமிழன் நகர், சென்பகராமன்புதூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் 629304, (3) திருமதி. டி. அன்னி சோபியா ரெக்ஸ்லைன், (உடன் கடன்தாரர்), W/O. திரு. திருக்கடல் உதயம், தமிழன் நகர், சென்பகராமன்புதூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் 629304 ஆகியோருக்கு ஜனவரி 02, 2016 தேதியின்படி செலுத்த வேண்டிய மொத்தம் ரூ.12,99,37,830/- (இந்திய ரூபாய் பன்னிரண்டு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்ணூற்று முப்பது மட்டும்)** நிலுவைத் தொகை மற்றும் அறிவிப்பு தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் சேர்த்துள்ள வட்டி ஆகியவற்றை திருப்பிச் செலுத்துமாறு ஈடுபெற்ற கடன் வழங்கியவரான சிட்டி யூனியன் வங்கி கோரியிருந்தது என்று பொது மக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி 60 நாட்களுக்குள் முழு நிலுவைத் தொகையையும் திருப்பிச் செலுத்தத் கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ நிறுவன உத்தரவாததாரர்கள் தவறிவிட்டதால், SARFAESI சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் பிரிவு 13(4)ன் கீழ் இந்தியா ரிசர்ஜென்ஸ் ஏஆர்சி பிரைவேட் லிமிடெட்', தொலைபேசி உதவி எண்: +91 7291981124/25/26, உதவி மின்னஞ்சல் முகவரி: support@bankeauct